**திரு. பெ. சௌந்தரபாண்டியன்** : ஆன் எ பாயின்ட் ஆப் கிளாரிபிகேஷன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : பாயின்ட் ஆப் கிளாரிபிகேஷன் ஒன்றுமில்லை.

**திரு. பெ. சௌந்தரபாண்டியன்** : ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர். தலைவர் அவர்களே, இது நம்முடைய பேரவை சம்பந்தப்பட்டது. நம் பேரவையில் நிகழ்ச்சி அத்தனையையும் குறிப்பெடுக்க பத்திரிகையாளர்களுக்கு நாம் இடம் ஒதுக்கி இருக்கிறோம். இடம் ஒதுக்குகிற பிரச்னை பற்றி . . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : இதில் ஒன்றும் பாயின்ட் ஆப் ஆர்டர் இல்லை. இடம் கொடுக்கிறது எல்லாம் அட்வைசரி கமிட்டியிடம் இருக்கிறது. பேரவைக்கும் அதற்கும் சம்பந்தம் இல்லை.

3. கவன ஈர்ப்பு

**(அ) எஸ்.ஐ.ஈ.டி. கல்லூரி மாணவிகள் மூன்றாவது கால கட்டணத்தை செலுத்த வேண்டுமென கல்லூரி நிர்வாகம் வற்புறுத்தலும் அதனால் மாணவிகளுக்கு ஏற்பட்டுள்ள அல்லலும் குறித்து.**

THIRU H. V. HANDE : I wish to call the attention of the Hon. Minister for Education and Tourism to a matter of urgent public importance, namely, the hardship caused to the students of S.I.E.T. Women's College as a result of the management of the College claiming Rs. 80 for the third term college fees from each student.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்** : அண்மைக் காலம் வரை தனியார் கல்லூரிகளின் கணக்குகள் கல்லூரிக் கல்வி இயக்குநரின் ஒப்புதல் பெற்ற தனிப்பட்ட தணிக்கையாளர்களால் தணிக்கை செய்யப்பட்டு வந்தது. இந்த முறையை மாற்றி தனியார் கல்லூரிகளின் கணக்குகளை இனி கல்வித் துறை தணிக்கை பிரிவு தணிக்கை செய்யும் என்று அரசு ஆணையிட்டது. இதற்கேற்ப எஸ்.ஐ.ஈ.டி. கல்லூரியின் கணக்குகளை கல்வித் துறைத் தணிக்கைப் பிரிவு சரிபார்க்கும் என்று கல்லூரிக் கல்வி இயக்குநர் நிர்வாகத்திற்குத் தெரியப்படுத்தினர். ஆனால் நிர்வாகம் இதற்கு

ஒப்புக்கொள்ளவில்லை. மேலும் துறை தணிக்கையாளர்களை கல்லூரிக்கு அனுப்ப வேண்டாம் என்றும் நிர்வாகம் தெரிவித்தது. இப்பொருளில் அரசு ஆணை வரும் வரை, புகுமுக வகுப்பு நட்ட ஈட்டு மானியத்தை எஸ்.ஐ.ஈ.டி. கல்லூரிக்கு வழங்காமல் இருப்ப தாக இயக்குநர் தெரிவித்தார்.

அரசு இப்பொருளில் ஒரு முடிவெடுக்கு முன்னர் மூன்ருவது கால கட்டணமாகிய ரூ. 80-ஐ உடனே செலுத்த வேண்டும் என்று கல்லூரி மாணவிகளுக்கு கல்லூரி முதல்வர் ஒரு அறிக்கை அனுப்பினுர். மாணவிகள் கல்லூரிக் கல்வி இயக்குநரிடமிருந்து இத் தொகையைப் பின்னர் பெற்றுக்கொள்ளலாம்.

மாணவிகள் அவதிக்குள்ளாகக்கூடாது என்று அரசு விரும்பியதால் புகுமுக வகுப்பு நட்ட ஈட்டு மானியத்தைக் கல்லூரிக்கு வழங்கும்படி கல்லூரிக் கல்வி இயக்குநர் கேட்டுக் கொள்ளப்பட்டார். மேலும் கல்வித் துறை தணிக்கைப் பிரிவின் தணிக்கைக்கு நிர்வாகம் ஒப்புக்கொண்டால்தான் மானியம் இனி வழங்கப்படும் என்று நிர்வாகத்திற்கு அறிவுறுத்தும்படியும் கல்லூரிக் கல்வி இயக்குநர் கேட்டுக் கொள்ளப்பட்டார். அதன்படி புகுமுக நட்ட ஈட்டு மானியம் கல்லூரிக்கு வழங்க முயற்சி எடுக்கப்பட்டுவிட்டது. ஆகவே மாணவிகள் கட்டணம் செலுத்தத் தேவையில்லை.

**டாக்டர் எச். வி. ஹாண்டே :** தலைவரவர்களே, அமைச்சர் அவர்களுடைய பதிலில் மாணவிகள் கட்டணம் செலுத்தத் தேவையில்லை என்று சொன்னுர்கள். ஆனுல் கல்லூரியில் அவர்கள் இன்னும் வற்புறுத்தப்பட்டுக் கொண்டு இருக்கிருர்கள். அதற்காக சுற்றறிக்கை கூட அனுப்பி இருக்கிருர்கள். அதன் நகல் கூட அமைச்சர் அவர்களுக்கு அனுப்பி இருக்கிறேன். அதில் 1973-74க்கு மூன்ருவது டர்முக்கு இன்னும் சேர வேண்டிய சப்சிடி பணம் வந்து சேரவில்லை. ஆகவே திட்டவட்டமாகக் கொடுக்க வேண்டும் என்று சொல்லியிருக்கிருர்கள். வேறு வகையில் மற்ற கல்லூரிகளிலும் வாங்கிக் கொண்டிருக்கிருர்கள். இங்கே

வாக்குறுதி கொடுத்தாலும் அங்கே நடைமுறையில் வேறுமாதிரி இருக்கிறது. ஆகவே இதற்குப் பரிகாரம் காணும் வழியில் ஏதாவது நடவடிக்கை எடுக்கப்படுமா என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** கல்லூரி முதல்வர் அப்படி ஒரு அறிக்கை வெளியிட்டிருந்தார். தணிக்கையாளர் களுக்கு இடம் தராத வரையில் இந்த நட்ட ஈட்டு மானியத் தொகை தர முடியாது என்று கொண்டபோது உள்ள நிலை அது.

மாணவிகள் தரவேண்டிய கட்டணத்தை உடனடியாக அனுப்புமாறு கல்வி இயக்குநர் கேட்டுக்கொள்ளப்பட்டுவிட்டார். ஆகவே, இனி மாணவிகள் கட்டணம் செலுத்த வேண்டிய அவசியம் இல்லை. மாணவிகளுக்கு உரிய கட்டணம் உடனே போய்ச் சேரும். போய்ச் சேராவிட்டால் உடனடியாகச் சேருவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். ஆகவே அந்த அறிக்கையைப் பார்த்து மாணவி களுக்குத் தொல்லை ஏற்படக்கூடாது என்பதுதான் அரசின் எண்ணம்.

**டாக்டர் எச். வி. ஹாண்டே :** அதற்காக ஒரு நோட்டிபிகேஷன் போட்டுவிட்டால் மாணவிகள் அறிந்துகொள்ள முடியும். இல்லாவிட்டால் அவர்கள் தெரிந்துகொள்ள வாய்ப்பில்லை. அப்படி ஒரு நோட்டிபிகேஷன் போட்டுவிட்டால் சௌகரியமாக இருக்கும். இதற்கு அரசாங்கம் ஏதாவது நடவடிக்கை எடுக்குமா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** அப்படிச் செய்ய முடியுமானல் அப்படி ஒரு அறிக்கை விடப்படும்.

**திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** பேரவைத் தலைவரவர்களே, பேரவையில் நடக்கின்ற விவரங்களை எழுதிக்கொள்வதற்கும் அதனல் மக்களுக்கு நன்மை கிடைப்பதற்கும் இங்கே குறிப்பெடுக்க பத்திரிகையாளர்கள். . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இந்த கவன ஈர்ப்புத் தீர்மானத்தில்தான் பேச வேண்டும். வேறு ஒன்றையும் பேசக் கூடாது.

**திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** என் கண்டனத்தைத் தெரிவிக்கும் முறையில் அதை நான் படிக்க விரும்பவில்லை.